RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s22264

OPEN ACCESS

# மாதர் மறுமணம் இதழில் காணலாகும் குழந்தை மணமும் விதவை நிலையும்

வீ. பாஸ்கரன் [அ, *], மு.சு.கண்மணி [அ]

[அ] தமிழ் உயராய்வு மையம், ஸ்ரீசேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை-630303, தமிழ்நாடு, இந்தியா

# Child Marriage and Widowhood in the Magazine 'Maathar Marumanam'

V. Baskaran [a, *], M.S. Kanmani [a]

[a] Department of Tamil, Sree Sevugan Annamalai College, Devakottai-630303, Tamil Nadu, India

* Corresponding Author:
vrbskn1993@gmail.com

Received: 26-09-2022
Revised: 08-11-2022
Accepted: 01-11-2022
Published: 05-12-2022

Check for updates

## ABSTRACT

In the early period, matrilineal society prevailed. Female were considered the foremost in activities. People worked as a group under a woman's leadership. She had the power to attract people. Thus, men are not considered eligible for leadership. Patriarchy started when a man started to feel that a woman is responsible for impregnating a woman. The patriarchy enslaved the woman and relegated the patriarchal society. One justice for a man and one justice for a woman began. If the husband dies, the wife should not remarry. But if the wife dies, the husband can remarry, according to patriarchy. The practice of polygamy, where a man can marry as many women as he wants, and the custom where the wife must also jump into the fire when the husband dies, when he is buried and so on. And the pre-pubertal child marriage and widows are beheaded and forced to wear white cloths all these rules are laid down by patriarchal society. Inorder to wipe out all these customs and rituals social reformers like Rajaram Mohan Roy, Periyar and Dr. Ambedkar fought to root out these deadly practice. Subsequently, the magazine 'Maathar Marumanam' appeared. Magazines were published covering topics such as abstinence, religion, spirituality, women's education, anti-child marriage, widow remarriage, family, child protection, caste inequality, industry, health, sports, agriculture, literature, art and philosophy. Among such published magazines, 'Maathar Marumanam' is the first magazine launched only for widow remarriage and the only magazine in the history of journalism to cover this issue. The purpose of this article is to examine the magazine.

**Keywords:** Maathar Marumanam, Ambedkar, Widow, Remarriage, Caste

## முன்னுரை

தொடக்க காலத்தில் தாய்வழிச் சமுதாயமே கோலோச்சிருந்தது. பெண்ணே எல்லா செயல்பாடுகளிலும் முதன்மையானவளாகக் கருதப்பட்டாள். இவள் தலைமையில் மக்கள் குழுவாகச் செயல்பட்டனர். மக்களைப் பெறும் ஆற்றலைப் பெற்றிருந்தாள். இதனால், ஆண் தலைமைத் தகுதிக்கு உரியவனாகக் கருதப்படவில்லை. என்றைக்கு பெண்ணைக் கருவுறச் செய்வதற்கு ஒரு ஆண்தான் காரணம் என்று உணர ஆரம்பித்தானோ அன்றே ஆணாதிக்கம் தொடங்கியது. அப்படித் தொடங்கிய ஆணாதிக்கம், பெண்ணை அடிமை செய்து கீழ்நிலைக்குத் தள்ளி தந்தைவழிச் சமுதாயம் கோலோச்சியது.

ஆணுக்கொரு நீதி, பெண்ணுக்கொரு நீதி என்ற நிலை தொடங்கியது. கணவன் இறந்து விட்டால் மனைவி வேறு திருமணம் செய்தல் கூடாது. ஆனால் மனைவி இறந்து விட்டால் கணவன் வேறு திருமணம் செய்யலாம் என்ற கட்டளை ஆணாதிக்கத்தால் வகுக்கப்பட்டுள்ளது. ஒருவன் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் திருமணம் செய்யலாம் என்கிற 'பலதாரமண முறையும்', கணவன் இறந்து விட்ட பின் அவனை எறியூட்டும் போது அவன் மனைவியும் தீயில் குதித்து எறிய வேண்டும் என்கிற 'உடன்கட்டை ஏறும்' வழக்கமும் ஆணாதிக்கத்தால் கட்டமைக்கப்பட்டது.

மேலும் பருவம் அடையும் முன் பெண் குழந்தைகளைத் திருமணம் செய்வதும், விதவையான பெண்களை தலையைமழித்து, வெள்ளாடை அணிந்து மூலையிலே தள்ளும் கொடிய வழக்கத்தையும் ஆணாதிக்கச் சமுகம் வகுத்துள்ளது. இப்படி இருந்த காலகட்டத்தில் இந்த கொடிய செயல்களை வேரறுக்க இராசாராம் மோகன்ராய், தந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கார் போன்ற சமுகச் சீர்திருத்தவாதிகள் போராடினார்கள். அதன் தொடர்ச்சியாக 'மாதர் மறுமணம்' இதழ் தோன்றியது.

வைதீகம், மதம், ஆன்மீகம், பெண்கல்வி, குழந்தை திருமண எதிர்ப்பு, விதவை மறுமணம், குடும்பம், குழந்தை பாதுகாப்பு, சாதிய ஏற்றத்தாழ்வு, தொழில், சுகாதாரம், விளையாட்டு, வேளாண்மை, இலக்கியம், கலை, தத்துவம் போன்ற செய்திகளை உள்ளடக்கி இதழ்கள் வெளிவந்தன. அவ்வாறு வெளிவந்த இதழ்களுக்கு மத்தியில் விதவை மறுமணத்திற்காக மட்டும் தொடங்கப்பட்ட முதல் இதழாகவும், இதழியல் வரலாற்றில் இந்தப் பொருண்மையை உள்ளடக்கிய ஒரே இதழாகவும் 'மாதர் மறுமணம'; காணப்படுகின்றது. அவ்வாறு வெளிவந்த இதழினைக் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது. மாதர் மறுமணம் இதழ், குழந்தை மணம், விதவை நிலை.

## மாதர் மறுமணம் இதழ்

1936 ஆம் ஆண்டு காரைக்குடியில் தொடங்கப்பட்டது. இவ்விதழின் ஆசிரியர் மு.மரகதவல்லி. பெண்ணிய வரலாற்றில் தமிழக பெண்களுக்கான விடுதலையை பெண்கள் பேசத்தயங்கிய, பேசுவது தவறென்று கருதிய காலகட்டத்தில் மரபுசார் பண்பாட்டுக் கட்டமைப்பைத் தகர்க்கும் வகையில் அமைந்தப் பொருண்மையை மட்டுமே உள்ளடக்கமாக கொண்ட இதழாகக் காணப்படுகிறது. இவ்விதழினை பெண் ஆசிரியராக இருந்து அவ்விதழை நடத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தகுந்த ஒன்றாகவே கருதவேண்டியுள்ளது.

ஆய்வுக்கான தேடலின் அடிப்படையில் மாதர் மறுமணம் இதழ் 13 இதழ்கள் தற்பொழுது கிடைத்துள்ளன. அவைகளின் பட்டியல் பின்வருமாறு:

| வ.எண் | ஆண்டு | மலர் | இதழ் | ஆண்டு மாதம் | மொத்தபக்கம் |
|---|---|---|---|---|---|
| 1 | 1936 | 1 | 7 | தாது, (மாசி) | 47 |
| 2 | 1938 | 3 | 1 | வெகுதானி(ஆவணி) | 90 |
| 3 | 1938 | 3 | 2 | வெகுதானி (புரட்டாசி) | 44 |
| 4 | 1938 | 3 | 3 | வெகுதானி (ஐப்பசி) | 44 |
| 5 | 1938 | 3 | 4 | வெகுதானி(கார்த்திகை) | 48 |
| 6 | 1938 | 3 | 5 | வெகுதானி(மார்கழி) | 44 |
| 7 | 1938 | 3 | 6 | வெகுதானி(தை) | 48 |
| 8 | 1938 | 3 | 7 | வெகுதானி(மாசி) | 43 |
| 9 | 1938 | 3 | 8 | வெகுதானி(பங்குனி) | 48 |
| 10 | 1939 | 3 | 9 | பிரமாதி(சித்திரை) | 44 |
| 11 | 1939 | 3 | 10 | பிரமாதி(வைகாசி) | 44 |
| 12 | 1939 | 3 | 11 | பிரமாதி(ஆனி) | 48 |
| 13 | 1939 | 3 | 12 | பிரமாதி(ஆடி) | 44 |

இப்பட்டியலைக் காணும் பொழுது மாதர் மறுமணம் இதழ் மாதம் ஒருமுறை வெளிவந்த இதழ் என்பதை அறிய முடிகிறது.

மலர்-1இல் உள்ள 7வது இதழ் 47-பக்கங்களைக் கொண்டுள்ளது. மலர் 3இல் உள்ள 1-வது இதழ் 90 பக்கங்களையும், 2, 3, 5, 9, 10, 12-ஆகிய இதழ்கள் 44 பக்கங்களையும், 4, 6, 8, 11-ஆகிய இதழ்கள் 48 பக்கங்களையும், 7-வது இதழ் 43-பக்கங்களையும் கொண்டுள்ளன.

இதன் மூலம் ஒவ்வொரு இதழும் தனித்தனி பக்க அளவுகளைக் கொண்டதாக இருப்பதை அறியமுடிகின்றது. ஒவ்வொரு இதழிலில் உள்ள செய்தி அளவினைக் கொண்டு பக்க அளவுகளும் மாறியிருக்கலாம் என கருதவேண்டியுள்ளது. இவ்விதழ் முழுமையாக விதவை மறுமணத்தை மையப்படுத்தி வெளிவந்த இதழ் என்பதை அறிய முடிகிறது.

## குழந்தை மணம்

குழந்தைத் திருமணம் என்பது குழந்தைப் பருவத்தில் உள்ள ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமணம் செய்வதும், வயதில் மூத்த அல்லது முதுமையை எய்திய ஆணுக்கு பெண் குழந்தையைத் திருமணம் செய்வதும் குழந்தைத் திருமணமாகும்.

இந்த குழந்தைத் திருமணம் ஆணாதிக்க எண்ணம் கொண்ட சமூகத்தால் செய்து வைக்கப்படும் ஒரு கொடிய செயலாகும். இந்தக் கொடிய செயலை செய்வதால் குழந்தைப் பருவத்திலேயே பெண்கள் விதவையாக நேரிடுகிறது. இதனால் அவர்களின் கல்வி, சுதந்திரமான எதிர்காலம் பாதிக்கப்படுகிறது.

குழந்தைப் பருவத்தில் விதவையான பெண்களின் எண்ணிக்கைப் பன்மடங்காக உயர்ந்திருப்பதை மாதர் மறுமணம் இதழ் சுட்டிக்காட்டுகிறது.

“1 வயதுக்குட்பட்ட விதவை - 1515

1 வயதுக்கு மேல் 2 வயது வரை - 1785

2 வயதுக்கு மேல் 3 வயது வரை - 3485

3 வயதுக்கு மேல் 4 வயது வரை - 9076

4 வயதுக்கு மேல் 5 வயது வரை - 15019

5 வயதுக்கு மேல் 10 வயது வரை - 105482

10 வயதுக்கு மேல் 15 வயது வரை - 185339

15 வயதுக்குட்பட்ட மொத்தம் - 321701”

இப்புள்ளி விவரத்தைக் காணும் போது பெண் குழந்தைகள் பிறந்து, தவழ்ந்து நடைபழகிய காலத்திலேயே விதவையாகியிருப்பது வேதனைக்குரிய ஒன்றாகவே கருதவேண்டியுள்ளது.

மாதர் மறுமணம் இதழில் இடம்பெற்றுள்ள கே.வி.அப்பா எழுதிய ‘பெண்கள் சுதந்திரம்’ என்ற கவிதையில்,

“சின்னஞ் சிறுவயதில் - கணவன்

சென்றிடில் விதவை யெனப் பட்டமுங்கட்டி

எழில் குழல் தான் சிதைத்து - அவள்

இலங்கிடும் ஆபரணம் இறக்கிடுவார்

கலர்ப் புடவை களைந்து - அன்னவர்

கண்கலங்க வெண்புடவைதான் கொடுத்து

பண்ணு மலங் கோலம்”

என்ற கவிதை வரிகள் பெண் குழந்தைகளுக்கு இழைக்கப்படும் அநீதிகளைச் சுட்டிக்காட்டுகிறது.

குழந்தைப் பருவத்தில் விதவையான பெண்கள் பருவம் அடைந்து மறுமணம் செய்து கொள்வதற்கும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. அதனையும் மீறி மறுமணம் செய்துகொண்டால் அல்லது ஒரு ஆடவனை விரும்பினால் அவ்விதவைப் பெண் இச்சமுகத்தில் வாழ்வதற்குத் தகுதியற்றவள் என கருத்தப்பட்டுள்ளாள் (Maragathavalli, 1938).

'ஜவாப்தாரி யார்?' என்னும் கதை சமூகத்தில் நடக்கும் கொடுமையைப் படம்பிடித்துக் காட்டுகிறது. 14-வயது நிறைந்து பருவம் அடைந்த ராஜாம்பாள் என்ற பெண்ணை அருணாசலம் என்ற இளைஞுனுக்கு திருமணம் செய்து வைத்தனர். திருமணம் செய்த இரண்டாண்டுகள் கழித்து அருணாசலத்திற்கு டைப்பாய்டு காய்ச்சல் வந்ததால் அவன் இறந்து போனான். அதனால் அவனின் மனைவி ராஜாம்பாள் விதவையானாள். காலம் சென்றது. விதவையான ராஜாம்பாள் காமக்கிளர்ச்சியால் வழிதவறினாள். இதனால் நான்கு மாத கர்ப்பமானாள். இச்செய்தி வெளியே தெரிந்தால் ஊரார்கள் தூற்றுவார்கள் என்றெண்ணி கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டாள் என இக்கதை கூறுகின்றது.

இக்கதையில் மூலம் விதவை பெண்கள் மறுமணம் செய்வதற்கும், சுதந்திரமாக வாழ்வதற்கும் இச்சமூகம் இடம் கொடுக்கவில்லை. அதனையும் தாண்டி தன் விருப்பப்படி வாழ முற்பட்டால் ஆணாதிக்கச் சமூகம் அவர்களுக்கு கொடுக்கும் தண்டனை “மரணம்” என்பதை இக்கதையின் மூலம் காணமுடிகிறது.

கருவில் இருக்கும் குழந்தைக்கு திருமணம் செய்திருப்பதும், அதனை பெற்றோர்களே முன்னின்று நடத்தியிப்பதையும் காணமுடிகிறது. 'விவாகமில்லாத விதவை' என்ற கதை இந்தியிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இக்கதை கருவில் இருக்கும் குழந்தைக்கு திருமணம் நிச்சயம் செய்திருப்பதை சுட்டிக்காட்டுகிறது. நளினி என்னும் விதவைப் பெண் அவள் தாயின் வயிற்றில் கருவாகி இருக்கும் போதே விதவையானாள் என்பதை அவள் தாய் பின்வருமாறு கூறுகின்றாள்.

“அப்பா.. அந்த வயிற்றெரிச்சலை ஏன் கிளப்புகின்றாய்? அவள் என் கர்ப்பத்திலிருந்த காலத்தில் என் தோழி யொருத்தியும் கர்ப்பமாயிருந்தாள். இவளுக்கும் என் தோழியினுடைய கர்ப்பத்திலுள்ள சிசுவுக்கும் விவாகம் செய்வதென்று நிச்சயம் செய்யப்பட்டது. அவளுக்கு ஒரு ஆண் குழந்தையே ஜனித்து விட்டது. துரதிருஷ்ட வசமாய் 15 நாட்களுக்கெல்லாம் மரித்து விட்டது. கடவுள் சித்தம் இப்படி இருக்கின்றது.” என்று கூறுவதாக இக்கதை அமைந்துள்ளது. இக்கதையைப் படிக்கும் போது மானிட இனத்தின் அறியாமை வெளிப்பட்டு நிற்பதை அறிய முடிகிறது.

ஓடியாடி விளையாட வேண்டிய வயதில் பெண் குழந்தைகளுக்கு திருமணம் செய்வதும், விதவையான பெண்குழந்தைகளுக்கு சாத்திர சடங்கு முறை என்ற பெயரில் முக்காடிட்டு மூலையிலே தள்ளுவதும் போன்ற கொடுமைகள் பெண்களுக்கு அரங்கேறியிருப்பதை மாதர் மறுமணம் இதழில் காணமுடிகிறது (Maragathavalli, 1938).

## விதவை நிலை

விதவை என்ற சொல்லிற்கு 'கைம்மை' என்ற சொல்லும் உண்டு. திருமணமான பெண்களை அழகி, மாங்கல்யதாரணி, சுமங்கலி, வெற்றி, சுபகாரியம், திருமகள், திருவிளக்கு என்று அழைப்பர். அதே திருமணமான பெண் கணவனை இழந்தவள் என்றால் கைம்மை, விதவை, முண்டை அறுதலி மொட்டைச்சி, வெள்ளைப் பிசாசு, அபசகுனி, இருட்டு மூலையே இருப்பிடம் என்றெல்லாம் பெயர்கள் வைத்து அழைப்பர். இதுதான் விதவையின் நிலையாக இருந்து வந்துள்ளது. இக்கொடிய வழக்கம் இன்று நேற்று தோன்றியது அல்ல சங்க இலக்கியக் காலத்தில் தோன்றியது எனலாம். கணவனை இழந்த பெண்கள் உணவு உண்பதற்கும், அணிகலன்களை அணிவதற்கும், கூந்தல் களைவதற்கும், தூங்குவதற்கும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

வெள்ளரி விதைகளைப் போன்ற வெள்ளை நிறமான நெய் கலவாத நீருடன் கலந்தசோறு அதனைப் பிழிந்தெடுத்து அத்துடன் வெள்ளை நிறமுள்ள எள்ளை அரைத்து ஆக்கயத் துவையல்

புளியிட்டுச் சமைத்த வேளைக்கீரை இவற்றை உண்டு என்னால் கைம்மை நோன்பினை இருக்க முடியாது என்று பூதப்பாண்டியன் இறந்த போது அவரின் மனைவி பெருங்கோப்பெண்டு பாடிய பாடல் புறநானூற்றில் இடம் பெறுகிறது.

"அணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந்திட்ட

காழ் போல் நல்விளர் நறுநெய் தீண்டாது

அடைஇடைக் கிடந்த கைபிழி பிண்டம்

வெள்எள் சாந்தொடு பளிப்பெய்து அட்ட

வெளை வெந்தை வல்சி ஆகப்" (Avvai Thuraisamipillai, 2015)

என்று சங்க இலக்கியப் பாடல் கூறுவதைக் காணமுடிகிறது.

'மாதர் மறுமணம்' இதழில் இடம் பெற்றுள்ள 'சமூகக் கண்ணாடி' என்னும் கதையில் ஒரு இளம் பெண் கணவன் இறந்ததும் விதவையாகிறாள். அன்றிலிருந்தே அவளின் ஆடையலங்காரம் அற்றுப்போயின. தலைவாரி பூச்சூடுவதும் இல்லை. இதனைக் கவனித்த அவளின் தங்கை, எப்படியாவது தன் அக்காவின் விதவை கோலத்தை மாற்றி தலைவாரி பூச்சூட்டிட வேண்டும் என நினைத்தவள் ஒரு நாள் அதைச் செயலிலும் காட்டி விட்டாள். அக்காவின் தலைவாரி பூச்சூட்டி மகிழ்ந்தாள். இதனைக் கண்ட அவளின் பாட்டி,

"ஏண்டி சண்டாளி! செய்த பாவம் தொலையாமல் தான் அனுபவிக்கிறாயே! இன்னும் ஏன் பாவ மூட்டையைச் சுமக்கிறாய்? நீ வாங்கி வந்த வரத்திற்கு பூ ஒரு கேடா? பின்னலொரு பவிஷா? என்ன அழுத்தமடி உனக்கு. உன் நெஞ்சைச் சுட்டால் என்ன? உன் கர்மம் நீ அனுபவிப்பதுடனில்லாமல் அந்த ஒரு பிள்ளையையும் உருட்டி விட்டாயே! உன் பாவந்தானே அவனைச் சூழ்ந்தது! புருஷனைத் தூக்கித் தின்றது அல்லாமல் பாவி பூவும் சூடுகிறாளே! மன்னவனை அனுப்பிவிட்டு மலர் சூட மனமும் வந்ததே இம்மாபாவிக்கு." என்றாள் (Maragathavalli, 1938).

இக்கதையை சற்று உற்று நோக்கினால் மக்கள் மூடநம்பிக்கையில் மூழ்கியிருப்பதும், பெண்ணே பெண்ணை அடிமை செய்யும் அளவிற்கு ஆணாதிக்கம் ஊடுருவி இருப்பதையும் இதன் மூலம் அறிய முடிகிறது.

'ஒரு விதவையின் துயரம்' என்னும் கவிதையில் விதவைகள் படும் துன்பத்தை காட்சிப்படுத்தியிருக்கின்றனர்.

ஒரு விதவைப் பெண் யாருமற்ற அனாதையாக இருப்பதும். ஊதவி செய்ய யாரும் இல்லை என்பதை நினைத்து வருந்திப் பாடுவதாக இக்கவிதை அமைந்துள்ளது.

"கோவிலுக்கும் பூசைகட்கும் கொட்டிடுவார் கோடி

குருக்களுக்கும் கொழுத்தவர்களுக்கும் கொடுத்திடுவார் கூடி

அன்புதானே தெய்வமென்று அறைந்திடுவார் வெகுவாய்

அன்புடையார் யாருமில்லை அவனியிலே கண்டீர்!

தருமமென்று சாற்றிடுவார் வாய்வலிக்கக் கூறி

கையினாலே செய்தறியார் காசிலொன்று பாதி

ஏழைகட்கும் அதிதிகட்கும் யார்துணைவர் ஐயோ!

இன்பம் நிறை யிவ்வுலகு துன்பக் களஞ்சியமோ?"

என்று கூறுவதிலிருந்து காணாத கடவுளிடம் அன்பு செய்யும் மனிதக் கூட்டம், காண்கின்ற மனித உயிர்களிடம் அன்பு செய்ய மறுத்து விடுகின்றன என்பதை இக்கவிதை வரிககள் உணர்த்துகின்றன (Maragathavalli, 1938).

எஸ்.சத்தியமூர்த்தி எழுதிய 'விதவைகளின் துயர்' என்னும் கட்டுரையில் கணவனை இழந்த ஒவ்வொரு விதவையும் 'வைதவ்வியம்' என்னும் சமூகக் கட்டமைப்பில் சிக்கி சீரழிந்து உள்ளனர் என்பதைக் எடுத்துரைக்கின்றது.

"ஜாதியாசாரத்தின் பெயரால் சிறுவயதிலே விவாகமாகித் தன் கணவனை இழந்து இரவு பகல் நித்திரையோ அமைதியோ சிறுதுமின்றி அல்லலுற்று வருந்தும் ஓர் பெண் பேதையின் இதயத்திற் புகுந்து பார்த்தால் அவளுடைய இதயம் வைதவ்யமென்ற அக்னியால் வெந்து சாம்பாராகிக் கொண்டிருப்பது தெரியவரும். அவளுடைய இளமை யுணர்ச்சிகளையும், அவளுடைய எண்ணிறந்த ஆசைகளையும், உயர்ந்த வழக்கங்களும் சிதறவடித்து விட்டன வென்பது புலனாகும். அவள் வைதவ்ய மென்ற யந்திரத்தில் அகப்பட்டுக் கொண்டு சக்கையாகப் பிழியப்படுகிறாள்." பெண்களுக்கு எதிராக நடக்கும் அநீதிகளைக் கண்டு இப்பூமியில் பெண்ணாய் பிறப்பதற்கு வேதனை அடைவதாக ஒரு பெண் கூறுகிவதைக் காணமுடிகிறது (Maragathavalli, 1938).

"எனக்கு இம்மனிதப் பிறவியை மறுபடியும் வழங்க வேண்டாம். ஆடவர்களின் போலி ஆசாரங்களை யனுஷ்டிக்குமாறு என்னைத் துன்பத்திற்குள்ளாக்காது. மிருகமாகவோ அல்லது பறவையாகவோ எனக்கு பிறவியருளும். அப்படியன்றி எனக்கு மானிடப் பிறவியே யருளுவீரேல் என்னைப் பெண்ணாகப் பிறப்பிக்க வேண்டாம். அதுவும் சாத்யமில்லை. என்னை பெண்ணாகப் பிறப்பிப்பதே உமதிச்சையானால் இந்துக்கள் வீட்டில் என்னைப் புகுத்த வேண்டாம்." என்று கூறுவதிலிருந்து ஒவ்வொரு விதவைகளும் எத்தகைய கொடுந்துயரங்களை அனுபவித்திருப்பார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள முடிகிறது (Maragathavalli, 1938).

சுதந்திரமான இந்திய நாட்டில் பெண்களுக்கு சுதந்திரம் மறுக்கப்பட்டு வந்துள்ளது. குறிப்பாக விதவைப் பெண்களுக்கு நடந்த அநீதிகளை இவ்விதழ் படம்பிடித்துக் காட்டியுள்ளது. அவ்வாறு மாதர் மறுமணம் இதழ் வெளிவந்து மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. இன்றைய 21ஆம் நூற்றாண்டில் முழுமையாக மாறியிருப்பதைக் காணமுடிகிறது. கணவனை இழந்த பெண்களின் தலையை மழித்து வெள்ளாடை அணிந்து வீட்டு மூலையிலே தள்ளும் வழக்கம் இன்றைக்கு ஒழிந்து, தான் விரும்பிய ஆடவனை தேர்ந்தெடுத்து மறுமணம் செய்துகொள்ளும் வழக்கம் மேலோங்கியுள்ளது. இன்றைக்கு எளிய வழியில் மறுமணம் செய்வதற்கு 'மறுமணம் தகவல் மையங்கள்' அதிகமாக தோன்றியுள்ளன. அதில் ஒரு தனியார் மறுமணம் தகவல் மையத்தில் மறுமணம் செய்து கொள்ள பதிவு செய்த ஆண் பெண் பற்றிய புள்ளி விவரம் பின்வருமாறு காண்க.

மறுமணத்திற்கு பதிவு செய்த ஆண், பெண்

மறுமணம் பெண்: 4768

மறுமணம் ஆண்: 48344

| மதம் | ஆண் | பெண் |
|---|---|---|
| இந்து | 42801 | 3947 |
| கிறிஸ்டியன் | 3381 | 571 |
| முஸ்லீம் | 2162 | 250 |

மறுமணம் - ஜாதி தடை இல்லை

பெண்: 834

ஆண்: 14005

மறுமணத்தை ஏற்றுக்கொள்ளும் ஆண் பெண்

திருமணம் ஆகாத பெண்கள் மறுமணத்தை ஏற்றுக்கொள்பவர்கள்:136

திருமணம் ஆகாத ஆண்கள் மறுமணத்தை ஏற்றுக்கொள்பவர்கள்:8738

இப்பட்டியலைக் காணும் போது மானிட இனம் நாகரீக வளர்ச்சியில் மேலோங்கி இருப்பதைக் காணமுடிந்தாலும், பெண்களை குழந்தைப் பருவத்தில் திருமணம் செய்யும் நிலை இன்னும் மாறவில்லை என்று தான் சொல்ல வேண்டும். 'சிவகங்கை மாவட்டம், திருப்புவனத்தில் 24 வயது வாலிபருக்கும், 13 வயது சிறுமிக்கும் திருமணம் செய்துள்ளனர்.' என்ற செய்தியை செய்தித் தாள்களில் படிக்கும் போது இன்னும் பகுத்தறிவுச் சிந்தனை மக்களிடம் இல்லையோ என்று எண்ணத் தோன்றுகிறது. இந்த நிலை முழுமையாக மாற்றம் அடைய மக்களிடம் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

## முடிவுரை

குழந்தை மணம் அதனால் ஏற்படும் விதவை நிலை குறித்து மாதர் மறுமணம் இதழ் வெளிவந்திருப்பது குறிப்பிடத்தக்க ஒன்று. ஆணாதிக்க அடக்குமுறை உச்ச நிலையிலிருந்த அக்காலகட்டத்தில் ஒரு பெண் ஆசிரியராக இருந்து இதழ் நடத்தியிருப்பது கவனிக்க வேண்டிய ஒன்று. பெண்கள் பருவம் அடையும் முன்பே திருமணம் செய்திருப்பதும், கணவன் இறந்து விட்டால் விதவையாவதும் போன்ற கொடுமைகள் நிகழ்ந்துள்ளதைக் காணமுடிகிறது. கருவில் இருக்கும் குழந்தைக்கு திருமண நிச்சயம் செய்வது மானிட இனத்தின் அறியாமையை வெளிப்படுத்துகிறது என்பதை அறியமுடிகிறது. விதவை பெண்கள் தலையில் பூ வைப்பதற்குக் கூட உரிமையற்றவர்களாக ஆணாதிக்கச் சமூகம் கட்டமைத்துள்ளதை அறிய முடிகிறது. பெண்களுக்கு எதிரான கொடுமைகளை வேரறுக்க சமூகச் சீர்த்திருத்தவாதிகள் முன்வந்தனர். அந்த வகையில் சமூகச் சீர்த்திருத்த நோக்கத்தோடு வெளிவந்த இதழ் மாதர் மறுமணம். இவ்விதழ் தோன்றி பல புரட்சிகரமான சிந்தனைகளை மக்களிடம் விதைத்தும், மக்கள் மனதில் உள்ள அறியாமை இருளை அகற்றியும் வந்துள்ளதை காணமுடிகிறது. இன்றைய காலத்தில குழந்தை மணம் என்பது வெகுவாக குறைந்து விட்டாலும் ஒரு சில இடங்களில் நடைபெறுவதைக் காணமுடிகிறது. கணவனை இழந்த பெண்களின் நிலை இன்றைய காலத்தில் மாற்றம் அடைந்திருக்கிறது. தான் விரும்பிய ஆணைத் தேர்வுசெய்து மறுமணம் செய்து கொள்ளலாம் எனகிற நிலை வந்துள்ளது என்பதை இக்கட்டுரையின் வழி காணமுடிகிறது,

## References

Avvai Thuraisamipillai, (2015) Purananooru Moolamum Uraium, Saratha Pathippakam, Chennai, India

Maragathavalli, M. (1938) Mathar Marumanam, Kumaran Achchakam, Karaikudi, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License